2. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

1—

புதிய மின்மாற்றி

***5676— திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், டி. ஆலங்குளம் காலனியில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், டி. ஆலங்குளம் காலனிக்கு தற்போது ஆலங்குளம் பகுதியிலுள்ள SS1-100 K.V.A. *திறன்கொண்ட மின்மாற்றியிலிருந்து மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பெருகிவரும் மின்தேவையைக் கருத்திற்கொண்டு, டி.ஆலங்குளம் காலனியில் 63* K.V.A. *திறன்கொண்ட ஒரு புதிய மின்மாற்றி அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து அனுமதி பெறவேண்டியுள்ளது. அனுமதி பெற்ற பின்பு, பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

முற்பகல் 10-05

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் உள்ளங்களிலும், ஏழையெளிய மக்களின் இல்லங்களிலும், அனைத்து சமுதாய மக்களின் உள்ளங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தினுடைய நிரந்தர பொதுச் செயலாளர், மக்களின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், டி. ஆலங்குளம் காலனி பகுதியில் இருக்கின்ற மின் மோட்டார்கள், குடிநீர் இணைப்புகள் போன்றவற்றிற்கு மின்சாரம் அதிகமாகத் தேவைப்படுகின்ற காரணத்தினாலும், அந்தப் பகுதியிலே செல்கின்ற மின் கம்பிகளின்மீது பனை மரங்கள் மற்றும் கருவேல மரங்கள் படுகின்ற காரணத்தினாலும், அடிக்கடி மின்தடைகள் ஏற்படுகின்றன. ஆகவே, அவற்றையெல்லாம் அகற்றிவிட்டு, அந்தப் பகுதியில் ஒரு புதிய மின்மாற்றி அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற டி. ஆலங்குளம் காலனி பகுதியில் ஏற்கெனவே சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திருப்பாச்சேத்தி 33/11 கிலோ வோல்ட் ஆளில்லாத துணை மின் நிலையத்திலிருந்து, பழையனூர் 11 கிலோ வோல்ட் மின்னூட்டி* Feeder *வழியாக, 100* K.V.A. *திறன்கொண்ட* S.S.1 *மின்மாற்றிமூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மொத்த மின் பளு 107.1 கிலோ வோல்ட்; அதாவது 119* K.V.A. *ஆகும். ஆனால்,*

2014 டிசம்பர் 4]

அங்கே இருக்கின்ற மின்மாற்றியினுடைய திறன் 100 K.V.A. *மட்டுமே உள்ளது. அந்தப் பகுதியிலே இருக்கின்ற வீட்டு மின் இணைப்புகள் 70; விவசாய மின் இணைப்புகள் 16; மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் 8; இதர மின் இணைப்புகள் 10; இவை அனைத்திற்கும் 107.1 கிலோ வோல்ட், அதாவது 119* K.V.A. *மின்சாரம் இப்பொழுது தேவைப்படுகிறது. ஆனால், அங்கே 100* K.V.A. *திறன்கொண்ட மின்மாற்றி மட்டுமே இருப்பதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை ஏற்று, பெருகியுள்ள மின் தேவையையும் கருத்தில்கொண்டு, உடனடியாக அந்தப் பகுதியில் கூடுதலாக 63* K.V.A. *திறன்கொண்ட மின்மாற்றி அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.*

புதிய மின்மாற்றி அமைப்பதற்கு 10 உயரழுத்த மின் கம்பங்கள் நடவேண்டிய சூழ்நிலை அங்கே இருக்கிறது. அந்த மின் கம்பங்களை நடுவதற்கு நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து அனுமதி பெறவேண்டியிருக்கிறது. அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவே, நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து விரைவில் அனுமதி கிடைக்கப் பெற்று, இந்த மாத இறுதிக்குள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்தக் காலனியில் கூடுதலாக 63 K.V.A. *திறன்கொண்ட புதிய மின்மாற்றி அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்துவதற்கு, பல ஆண்டுகளாக கவலையளித்து வந்த இந்தப் பிரச்சினையில் அந்த 5 மாவட்ட மக்களுடைய நலனைக் கருதி பல சட்டப் போராட்டங்களை நடத்தி, இமாலய வெற்றியைப் பெற்றுத் தந்த, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றியினைக் கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெரியகுளம் தொகுதி, தேவதானம்பட்டி பகுதியில் குறைந்த மின் அழுத்தம் இருப்பதனால், அங்கே ஒரு* sub-station *வேண்டுமென்று 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் நான் அது குறித்த பிரச்சினையை எழுப்பினேன். அப்போது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், திண்டுக்கல் மாவட்டம், எழுவனம்பட்டியில் ஒரு* sub-station *அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது என்றும்,* sub-station *அருகில் இருப்பதனால், அங்கிருந்து பெரியகுளம் பகுதிக்கு மின்சாரம் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார்கள். இப்போது அந்தப் பகுதியில்* sub-station *அமைக்கின்ற பணிகள் முடிந்து, அது செயல்படத் தொடங்கியிருக்கிறது. ஆனால், இதுவரையில் தேனி மாவட்டம், பெரியகுளம் பகுதியில் மின் சப்ளை முறையாக இல்லாத காரணத்தினால், மின் மோட்டார்கள் எரிந்துவிடுகின்றன. மேலும், வர்த்தகங்கள் நடைபெறாத வறட்சியான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல, அங்கேயிருக்கக்கூடிய* sub-station-*லிருந்து என்னுடைய பெரியகுளம் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள் குறிப்பிட்ட எழுவனம்பட்டியிலே புதிய* Sub-station *கட்டும் பணி முடிக்கப்பட்டுவிட்டது. இந்தப் பகுதிக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அவர்களுடைய கோரிக்கையும் நியாயமான கோரிக்கைதான். திண்டுக்கல் மின் வட்டத்திலே எழுவனம்பட்டி இருக்கிறது; தேனி மின் வட்டத்திலே தேவதானம்பட்டி இருக்கிறது. நிருவாக நடைமுறையின் காரணமாக, இந்தப் பணியிலே சற்று காலதாமதமாகிறதே தவிர, வேறொன்றுமில்லை. நிருவாக*

2014 டிசம்பர் 4]

நடைமுறைகளைப் பின்பற்றி, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை விரைவாக நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். இன்றைக்கு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்து, நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.*

திரு. ப. பார்த்தசாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விருகம்பாக்கம் தொகுதியில், எம்.ஜி.ஆர். நகர், சூளைப்பள்ளம் அருகே நிகழ்ந்த நிகழ்வினை இதே அவையிலே இரண்டு, மூன்று முறை குறிப்பிட்டு, கேள்வி நேரத்திலே நான் கோரிக்கை வைத்திருக்கிறேன். அங்குள்ள தெருக்களிலெல்லாம் மின் கம்பிகள் மேலே போகின்றன. அவற்றை அகற்றி, பூமிக்கு அடியிலே பதித்துத் தரவேண்டுமென்று இந்த அவையிலே கோரிக்கை வைத்திருக்கின்றேன். இதன் விளைவாக, அந்தப் பகுதியிலே மூன்று உயிர்கள் ஏற்கெனவே பலியாகியிருக்கின்றன. இனிமேலாவது அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கிடும் வகையில், உயிர் பலி ஏற்படாமல் இருக்க, அங்கு மேலே செல்கின்ற மின் கம்பிகளை அகற்றி, பூமிக்கு அடியில் பதித்துத் தர நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே நிலவுகின்ற பிரச்சினையைக் குறிப்பிட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வைத்திருக்கின்ற கோரிக்கை நியாயமானது. ஆனால், அங்கே புதைவடம் பதிப்பதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில், மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளைத் தவிர மற்ற இடங்களில்*

புதைவடம் மூலமாக மின் கம்பிகளை எடுத்துச் சென்றால், சற்று கூடுதல் செலவினம் ஏற்படும். அதற்குப் பதிலாக, அந்தப் பகுதியிலே நிலவும் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, புதைவடம் பதித்து, மின் கம்பிகளை எடுத்துச் செல்வதற்குப் பதிலாக, புதிதாக உயரமான மின் கம்பங்களை அமைத்து, பாதுகாப்பாக அந்த மின் கம்பிகளை, மின் கடத்திகளைக் கொண்டு செல்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள், மக்களின் முதல்வராக விளங்கிக் கொண்டிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியோடு, நல்லாதரவோடு இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த அரசின்மூலமாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதியிலே இரண்டு துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டுமென்று ஏற்கெனவே சட்டமன்றத்தில் பலமுறை நான் கோரிக்கை விடுத்திருந்தேன். அதை ஏற்று, கரம்பயம் என்ற ஊராட்சியிலே இன்றைக்குப் புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதற்காக தமிழக அரசுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கீழக்குறிச்சி என்ற பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் நான் ஏற்கெனவே கொடுத்திருக்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஒப்புதல் அளித்திருந்தார்கள். அந்தப் பணிகளை விரைவில் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற கீழக்குறிச்சி பகுதியிலே, மின் பளுவினை ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப, தேவை ஏற்படின் எந்த அளவிற்கு விரைவாக அதை அமைக்க முடியுமோ, அந்த அளவிற்கு விரைவாக அந்தப் பகுதியிலே புதிய துணை மின் நிலையத்தை

2014 டிசம்பர் 4]

அமைப்பதற்கு வேண்டிய பணிகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

2—

புராதன நகரம்

***31576— திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், முஞ்சிறையை புராதன நகரமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எனது பதிலினை இங்கே அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முஞ்சிறை பகுதி, மன்னர்கள் காலத்திலே பாசறை என்று அழைக்கப்பட்டு, வரலாற்றுச் சிறப்புமிக்க ஊராகத் திகழ்ந்து வந்தது. 15 ஆம் நூற்றாண்டில், முஞ்சிறையிலே சோழர் காலத்தில் அமைக்கப்பட்ட மகாதேவர் கோயிலில் பல சிற்பங்கள் உள்ளன. 1435 ஆம் ஆண்டு மேல்நாட்டு அரசர் வீரகேரளம் மார்த்தாண்டம் என்பவர் அங்கே தங்கியிருந்தார் என்றும், முஞ்சிறைப் பகுதியில் ஏராளமான மக்களுக்கு அன்னதானம் செய்து உதவினார் என்றும் வரலாறு*